NSW HEALTH
# Media Release

வியாழக்கிழமை, 13 ஜூன் 2024

## நியூ சவுத் வேல்ஸ் முழுவதும் நோய்த்தாக்கம் அதிகரித்து வருவதால், 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் இலவசக் குளிர்க் காய்ச்சல் தடுப்பூசிக்கு முன்பதிவு செய்யுமாறு வலியுறுத்தப்படுகின்றனர்

மாநிலம் முழுவதும் வைரஸ் தொடர்ந்து அதிகரித்து வருவதால், 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் தங்கள் இலவசக் குளிர்க்காய்ச்சல் தடுப்பூசிக்கு இப்போதே முன்பதிவு செய்யுமாறு மீண்டும் வலியுறுத்தப்படுகிறார்கள்.

சமீபத்திய நியூ சவுத் வேல்ஸ் சுகாதார சுவாசக் கண்காணிப்பு அறிக்கையானது (NSW Health Respiratory Surveillance Report) முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது, 8 ஜூன் 2024 -இல் முடிவடைந்த வாரத்தில் குளிர்க் காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டவர்கள் 25 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது என்று நியூ சவுத் வேல்ஸ் தலைமைச் சுகாதார அதிகாரி டாக்டர் கெர்ரி சாண்ட் (Dr Kerry Chant) கூறியுள்ளார்.

“மாநிலம் முழுவதும் குளிர்க்காய்ச்சல் வேகமாக அதிகரித்து வருகிறது. கடந்த வாரத்தில் மட்டும், குளிர்க் காய்ச்சல் போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்கள் அவசரகாலச் சிகிச்சைப் பிரிவுகளுக்கான விளக்கக்காட்சிகள் ஏறக்குறைய 22 சதவீதம் அதிகரித்துள்ளது என்று டாக்டர் சாண்ட் (Dr Chant) கூறினார்.

"குளிர்க் காய்ச்சல் சீசன் இன்னும் பல வாரங்களுக்கு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், எனவே உங்களுக்குத் தேவையான முக்கியப் பாதுகாப்பைப் பெற, உங்கள் இலவசக் குளிர்க் காய்ச்சல் தடுப்பூசிக்கு முன்பதிவு செய்வதற்கு இதுதான் சரியான நேரமாகும்.

"இது குளிர்க் காய்ச்சலால் கடுமையான நோய்க்கு ஆளாகும் உயர் அபாயத்திலுள்ள, குறிப்பாக 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த குழுவிற்கான எங்கள் தடுப்பூசி விகிதங்கள் இருக்க வேண்டிய அளவுக்கு இதுவரை இல்லை.

"தற்போது,  நியூ சவுத் வேல்ஸில் உள்ள 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் பாதிப் பேர் மட்டுமே (52.4 சதவீதம்) குளிர்க்காய்ச்சல் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்."

குளிர்க்காய்ச்சல், கோவிட்-19 மற்றும் ஆர்.எஸ்.வி. அனைத்தும் சமூகத்தில் பரவி வருவதால், சுவாச நோயின் அறிகுறிகளை அனுபவித்தால், மருத்துவமனைகள் மற்றும் முதியோர் பராமரிப்பு வசதிகள் உள்ளிட்ட உயர் அபாயமுள்ள அமைப்புகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு நாங்கள் சமூகத்திற்குத் தொடர்ந்து நினைவூட்டுகிறோம்.

நோய்த்தொற்று மற்றும் கடுமையான நோய்களுக்கு எதிராக வினையாற்றும் தடுப்பூசிதான் மிகச்சிறந்த பாதுகாப்பு ஆகும். அனைவரும், அதிலும் குறிப்பாக கடுமையான நோய் தாக்கும் அபாயத்தில் உள்ளவர்கள், இப்போதே தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறார்கள். தடுப்பூசி போடுவதன் மூலம் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் பாதுகாக்க நீங்கள் உதவுவீர்கள்.

குளிர்க்காய்ச்சலுக்கான தடுப்பூசி இலவசம். மேலும் இது குளிர்க்காய்ச்சலால் கடுமையான நோய் தாக்கும் அபாயத்தில் உள்ளவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கிறது. இது எந்த வயதினருக்கும் பொது மருத்துவர்கள் மூலமாகவும், ஐந்து வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் மருந்தகங்கள் மூலமாகவும் கிடைக்கிறது.

இலவசத் தடுப்பூசிக்குத் தகுதியுடைய, குளிர்க்காய்ச்சலினால் கடுமையான நோய் தாக்கும் உயர் அபாயத்தில் இருப்பதாகக் கருதப்படுபவர்களில் பின்வருவோர் அடங்குவர்:

- 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்
- ஆறு மாதங்கள் முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள்
- ஆறு மாத வயது முதல் உள்ள பழங்குடியினர்
- கர்ப்பிணிப் பெண்கள்
- நீரிழிவு நோய், புற்றுநோய், நோயெதிர்ப்புக் குறைபாடுகள், கடுமையான ஆஸ்துமா நோய், சிறுநீரகம், இதயம் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய் போன்ற தீவிர சுகாதார நிலைமைகளில் உள்ளவர்கள்.

கோவிட்-19, குளிர்க்காய்ச்சல் மற்றும் ஆர்.எஸ்.வி. போன்ற சுவாசம் சம்பந்தப்பட்ட வைரஸ்களிலிருந்து உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாக்க உதவும் சில எளிய வழிமுறைகளில் பின்வருவன அடங்கும்:

- உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட குளிர்க்காய்ச்சல் மற்றும் கோவிட்-19 தடுப்பூசிகள் குறித்து புதுப்பிக்கப்பட்ட தகவல்களுடன் இருக்கவும்
- நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் வீட்டிலேயே இருக்கவும், அத்துடன் நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தால் முகக்கவசத்தை அணியவும்
- திறந்த வெளியிலோ அல்லது திறந்த கதவுகள் மற்றும் சன்னல்கள் கொண்ட விசாலமான, நல்ல காற்றோட்டமான இடங்களிலோ ஒன்றுகூடவும்
- நெரிசலான இடங்களைத் தவிர்க்கவும்
- கடுமையான நோயுடன் உயர் அபாயத்தில் உள்ளவர்களைச் சந்திக்கும் முன்,

விரைவான காப்பூக்கிச் சோதனை (RAT) மேற்கொள்ள வேண்டுமென்பதைக் கருத்தில் கொள்ளவும்

- நீங்கள் கோவிட்-19 அல்லது குளிர்க்காய்ச்சலால் கடுமையான நோய் தாக்கும் அபாயத்தில் இருந்தால், இப்போதே உங்கள் மருத்துவரிடம் பேசவும், அத்துடன் நீங்கள் நோய்வாய்ப்பட்டால் என்ன செய்வது, என்ன பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிய ஒரு திட்டத்தை உருவாக்கி, வைரஸ் தடுப்பு மருந்துகளுக்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதைப் பற்றியும் கலந்தாலோசிக்கவும்.
- நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது கோவிட்-19 அல்லது குளிர்க்காய்ச்சலுக்கு நேர்மறையான சோதனை முடிவு வந்திருந்தாலோ, கடுமையான நோய் தாக்கும் உயர் அபாயத்தில் உள்ளவர்களைச் சந்திக்க வேண்டாம்
- கை கழுவுதல் உட்பட நல்ல கைச் சுகாதாரத்தைக் கடைபிடிக்கவும்.